## நான் ஏன் செய்யவேண்டும் & இணையவழி உறுதிமொழி ஆவணங்களை நான் எவ்வாறு பயன்படுத்த முடியும்?

## ஏன்?

1. ஒவ்வொரு மாணவருக்கும் இது கட்டாயமானதாகும் மற்றும் முதல் சேர்க்கையின்போதும் அதிலிருந்து ஒவ்வொரு வருடமும் வருடாந்திர பதிவின்போதும் அவனுடைய / அவளுடைய பெற்றோர் ரேக்கிங் எதிர்ப்பு உறுதிமொழி ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும். இவை யுஜிசி-இன் விதிமுறைகள் ஆகும்.
2. இந்த உறுதிமொழி ஆவணங்களிலிருந்து மாணவர்களின் தொடர்புத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஒரு மின்னனு மைய அமைவிடத்தில் சேமிக்கப்பட வேண்டும் என்பது மேதகு உச்ச நீதிமன்றத்தின் ஆணை ஆகும்.
3. இதுவரை ஒவ்வொரு கல்லூரியும் அத்தகைய தகவல்களைச் சேகரித்துள்ளன. ஆனால் அது எந்த மைய அமைவிடத்திலும் சேமிக்கப்படவில்லை. ஆனால் இந்த வருடம் ரேக்கிங் தடுப்புத் திட்டம் ரேக்கிங் எதிர்ப்பு உறுதிமொழி ஆவணங்களை பதிவிறக்கம் செய்வதற்காக இணைய வழியாக உருவாக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக கல்லூரி அதிகாரிகள் தனித்தனியாக விவரங்கள் சேகரித்து அதைத் தொகுக்க வேண்டியதில்லை. இது அவர்களின் பெருமளவு நேரம் மற்றும் ஆற்றலைச் சேமிக்கும்.

## எவ்வாறு?

4. இது மூன்று படிகளால் ஆன எளிய செயல்முறை ஆகும்.
   - படி 1: www.ANTIRAGGING.in
   - படி 2: தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து படிவத்தை சமர்ப்பிக்கவும்.
   - படி 3: வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தபிறகு மாணவர்கள் மற்றும் பெற்றோர் இருவருக்குமான உறுதிமொழி ஆவணங்களை மின்னஞ்சல் மூலம் நீங்கள் பெறுவீர்கள்.
5. நீங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பெற்றிருக்கவில்லை எனில் நீங்கள் உள்நுழையும் முன்பு மின்னஞ்சல் முகவரி ஒன்றை உருவாக்கிக் கொள்ளவும். உங்களுடைய பெற்றோர் மின்னஞ்சல்/அலைபேசி/ தரைவழி தொலைபேசி எண்ணைப் பெற்றிருக்கவில்லை எனில் அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். உங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களுடையதைக் கூட நீங்கள் கொடுக்க முடியும். இதில் பயப்பட ஏதுமில்லை. உங்களுடைய படிவத்தைச் சமர்ப்பிக்கும்போது நீங்கள் ஏதேனும் தவறு செய்துவிட்டால் நீங்கள் புதிதாக ஒன்றைத் தொடங்கி தகவல்களை மீண்டும் சமர்ப்பிக்கவும். எந்தப் பிரச்சினையும் இல்லை. இது மிகவும் எளிய செயல்முறை.